9. அறிவிப்பு

சட்ட விதிகளுக்கு உட்பட்டு உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாப் பிரச்சினைகளையும்* point of order *என்று எழுப்ப இயலாது.* Point of order *என்றால் என்ன என்பது குறித்து, ஏற்கெனவே உறுப்பினர்களுக்குப் பயிற்சி வகுப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இருந்தாலும், திரும்பவும் அதுபற்றிக் கூறுகிறேன்.* Point of order *என்றால், சட்டமன்ற நடவடிக்கைகள், விதிகளுக்கு மாறாகவோ—சட்டமன்ற நடவடிக்கைகள், விதிகளுக்கு மாறாகவோ—மரபுகளுக்கு மாறாகவோ நடைபெறுவதாக இருந்தால், ஓர் உறுப்பினர் எழுந்து நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த* point of order *கேட்கலாம். அதைவிடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளைக் கேட்க* point of order-*ஐப் பயன்படுத்த இயலாது.*

அதேபோன்று, ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, அவரது பேச்சில் ஏதாவது விளக்கம் கோர வேண்டுமெனில், point of clarification *கோரலாம். அதை அனுமதிப்பதற்கு விதிகளில் வழிவகை உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும்* point of order *கேட்பதைத் தவிர்த்து, அவசியமான தேவைகளுக்கு மட்டும், விதிகளுக்குட்பட்டு* point of order *கேட்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதுபோன்றே* point of clarification-*ம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இதிலேயும்* clarification-*ஆ?*

8. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 47— (இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை ஆயத்தீர்வைத் துறை)– *—தொடச்சி*
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*